அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அரையாண்டுத்தேர்வு 2023/2024

# தமிழ் - ஆண்டு 8

**புலன்மொழி வளத்தேர்வு** **வாசித்தல்**

பல்லினப் பண்பாட்டுச் சூழலில் வேறுபட்ட நடைமுறைகள் காணப்படுகின்றன. ஆனால், சில பண்புகள் பல்லின மக்களாலும் கடைப்பிடிக்கப்படுவதைக் காணக்கூடியதாக உள்ளன. அன்பு காட்டுதல், பிறரை மதித்தல், உதவி செய்தல் போன்ற பண்புகளே பல்லின மக்களுக்கும் பொதுவாகக் காணப்படுபவை ஆகும். பண்போடு கூடிய நல்ல எண்ணங்கள் உள்ளத்தில் ஊக்கத்தையும் மகிழ்ச்சியையும் தருகின்றன. பெரியவர்களின் பண்புநெறிகள் பிள்ளைகளின் மனத்தில் பதிகின்றன. அதனால், அவர்களின் செயற்பாடுகளும் பெற்றோரைப் போன்று அமைகின்றன.

எனவே, வீட்டுக்குள் பேசும் பேச்சுகள் நற்பண்பு கொண்டவையாகவும் பிள்ளைகள் மனத்தில் உயர்சிந்தனையை உருவாக்குபவையாகவும் இருத்தல் வேண்டும். குடும்பத்திலிருந்து பள்ளிக் குமுகத்துள் நுழையும் மாணவர்கள் மேம்பட்ட பழக்கவழக்கங்களைக் கொண்டிருப்பது சாலச்சிறந்தது. இதனால், மாணவர்கள் பள்ளிப் பருவத்தில் நல்ல நட்புறவுகளும் ஒற்றுமையும் உள்ளவர்களாக மிளிர்வார்கள். நாங்களும் மிகச்சிறந்த பண்பாளர்களாக வாழ்வோம்.